3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

1—

குடிநீர்த் திட்டம்

***20599—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, சென்பாக்கம், அல்லாபுரம், தொரப்பாடி பேரூராட்சிகளில் தனித்தனியே புதிய குடிநீர்த் திட்டம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருத்திய விடை. சென்பாக்கம் பேரூராட்சியிலுள்ள 13 ஆயிரத்து 500 மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி பேரூராட்சிகளிலுள்ள சுமார் 69 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும் ஏற்கெனவே செயல்படுத்தி பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்). திரு. வை. சிவபுண்ணியம், உட்காருங்கள்.*

திரு. வை. சிவபுண்ணியம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என் அறைக்கு வாருங்கள் பேசிக்கொள்ளலாம். திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 9-45

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் என்னுடைய வேலூர் மாநகராட்சியைச் சுற்றியிருக்கக்கூடிய செண்பாக்கம், அல்லாபுரம், தொரப்பாடி ஆகிய 3 பேரூராட்சிகளுக்கு 2008 ஆம் ஆண்டு செண்பாக்கத்திற்கு 79 இலட்சத்திலும், அதேபோல தொரப்பாடி, அல்லாபுரம் ஆகிய இரண்டிற்கும் சேர்த்து ரூபாய் 3 கோடியே 80 இலட்சத்திலும் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இப்போது அந்தப் பகுதிகளெல்லாம் மாநகராட்சியோடு இணையக்கூடிய பகுதிகள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் தாராளமாகப் பணத்தை வாரி வழங்கியுள்ளார்கள், பாலாற்றில் புதிதாகக் கிணறு தோண்டப்பட்டு, அதிலே நீராதாரம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, இன்று அல்லாபுரம், தொரப்பாடி பேரூராட்சிகளுக்கு 23 நாளைக்கு ஒருமுறை தண்ணீரும், செண்பாக்கம் பகுதியிலே மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீரும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அதிலே குடிக்க இலாயக்கற்ற உப்பு கலந்த தண்ணீராகத்தான் வந்து கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இப்போது மாநகராட்சிக்கென்று மட்டுமல்ல, வேலூர் மாவட்டத்தினுடைய அனைத்து பேரூராட்சிகளின், நகராட்சிகளின் நீண்டநாள் கனவாக இருந்து கொண்டிருக்கக்கூடிய ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நானும், என்னுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அருமை அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களும் பலமுறை இந்த அவையிலே வலியுறுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் இப்போது திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து-- ஏற்கெனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாக உறுதியளித்திருக்கிறீர்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில்

2011 ஜனவரி 10]

இருக்கிறது? எப்போது அது நிறைவேற்றப்படும்? டெண்டர் விடப்பட்டிருக்கிறதா என்பதை நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையின்கீழ்ப் பகுதியில் காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, வேலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய வேலூர் மாநகராட்சி, அதேபோல, தற்போது மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்படவுள்ள சத்துவாச்சாரி, தாரப்படவேடு நகராட்சிகள், தொரப்பாடி, அல்லாபுரம், செண்பாக்கம், கெழிஞ்சூர், காந்திநகர், காட்பாடி ஆகிய 6 பேரூராட்சிகள் மற்றும் 109 ஊரகக் குடியிருப்புகள் அதிலே அடங்கியிருக்கின்றன. இவை தவிர, இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு 1,295 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் தயாரிக்கப்பட்டு, நிருவாக ஒப்புதலும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டப் பணிகள் விரைவிலே தொடங்கப்படும். இந்தக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த 31-12-2010 அன்று ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள் மூன்று சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு 31-12-2010 அன்று கோரப்பட்டிருக்கின்றன. ஒப்புந்தப்புள்ளிகள் 3-2-2011 அன்று திறக்கப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இங்கே ஒரு விரிவான விளக்கத்தை அளித்திருக்கிறார்கள். குறிப்பாக, செக்கனூரிலிருந்து எடுக்கக்கூடிய ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்தான் எங்களுடைய வேலூர் மாவட்ட மக்களுடைய கனவையே நனவாக்கக்கூடிய ஒரு திட்டம். காரணம், பாலாற்றில் கடந்த ஐந்தாண்டுகளாக தண்ணீரே வராத காரணத்தினால், மற்ற

[2011 ஜனவரி 10

எல்லா மாவட்டங்களிலும் மழை நிறைய பெய்து மழை நிவாரணம் வேண்டுமென்றெல்லாம் கோரிக்கொண்டிருக்கக்கூடிய காலக்கட்டத்தில், எங்களுடைய மாவட்டத்தில் மட்டும் மழையே இல்லாமல் இன்னும் நாங்கள் மாண்புமிகு முதல்வரிடம் வறட்சிக்காக பணத்தைக் கேட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைதான் எங்களுடைய மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்கிறது. வருவதோ கோடைக்காலம்; தேர்தல் காலம் இரண்டும் சேர்ந்து கொள்வதோடு குடிநீர்ப் பிரச்சினையும் எங்களை வாட்டி வதைக்கும் என்கிற காரணத்தினாலே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும் வறட்சிக்காக எங்களுடைய மாவட்டத்திற்கு ரூ.500 கோடி கேட்டும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாராளமாக ரூ.100 கோடியாவது கொடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைக்கிறேன். இங்கே ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ரூ.1,295 கோடியிலே நிறைவேற்றயிருக்கிற காரணத்தினாலே, வேலூர் மாவட்டம், பொதுவாக தோல் பதனிடும் தொழிற்சாலையினுடைய கழிவுநீர் 300 அடி ஆழத்திற்கு பாலாற்றை பாதித்துவிட்டிருக்கிற காரணத்தினாலே இந்தக் குடிநீர்த் திட்டம்தான் எங்களுடைய மாவட்ட மக்கள் அத்தனைபேருக்கும் குடிநீர் வழங்கக்கூடிய ஒரு வாய்ப்பாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், எங்களுடைய நீண்டநாள் கோரிக்கையை இப்போது ஏற்று உடனடியாக அறிவித்ததற்காக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை மாவட்ட மக்கள் சார்பாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-50

இந்தத் திட்டத்திற்காக முதல்வர் அவர்களுக்கும், அதேபோல துணை முதல்வர் அவர்களுக்கும், உண்மையிலேயே எங்களுடைய மாவட்ட மக்கள் என்றென்றும் நிச்சயமாக நன்றியுடையவர்களாக இருப்பார்கள். எப்பொழுது இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்? **Tender** உடனே **open** செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது, ஆங்காங்கே ஒரு பெரிய அளவிலே பைப் புதைத்து, எல்லா நகராட்சி, பேரூராட்சிகளை இணைக்கிற அதே

2011 ஜனவரி 10]

காலகட்டத்தில் ஊராட்சிகளையும் இதிலே அதிகமாக 944 குடியிருப்புகளை மட்டும் நீங்கள் இணைக்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதுமட்டும் போதாது, இன்னும் அதிகமான கிராமங்களை நீங்கள் இதிலே நிச்சயமாக இணைக்க வேண்டிய ஒரு நிலை வரும். அதையும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் நிச்சயமாக ஆய்ந்து, இந்தத் திட்டத்தை எப்பொழுது முடிக்கப் போகிறார்கள் என்பதை ஆவலாக நான் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்பொழுது தொடங்கப்படும், எப்பொழுது முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுது தொடங்கப்படும், எப்பொழுது முடிக்கப்படும் என்ற ஒரு கேள்வியை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. அவை 3-2-2011-ல் திறக்கப்படவிருக்கின்றன. எனவே அப்பொழுதுதான் அவர் சொல்வதைப்போல அதற்கான கால நிர்ணயத்தை நிச்சயமாக நிர்ணயிக்க முடியும். எனவே, இந்தத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, பயனுக்கு வரக்கூடிய நேரத்தில் செண்பாக்கம், அல்லாபுரம், தொரப்பாடி உள்ளிட்ட மாநகராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள், நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீரும், பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்கள் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் குடிநீரும், ஊராட்சிப் பகுதியில் இருக்கக்கூடிய மக்கள் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீரும் பெற்று பயனடைவார்கள். இத்திட்டத்தினால் 18 இலட்சத்து 68 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலேயே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.